# BSNL ஊழியர் சங்கம்

# தமிழ் மாநிலம்

## BSNLஐ பாதுகாக்க அஞ்சல் அட்டை இயக்கம்

அன்பார்ந்த தோழர்களே,

BSNLஐ பாதுகாக்க பல ஆலோசனைகளை வழங்கி நமது அகில இந்திய FORUM அமைச்சருக்கு கடிதம் ஒன்று எழுதியுள்ளது. இந்த சூழ்நிலையில் அந்த ஆலோசனைகளை கணக்கில் எடுக்காமல் மத்திய அமைச்சரவை BSNLல் உள்ள டவர்களை தனியாக பிரித்து ஒரு துணை நிறுவனம் அமைக்க முடிவு செய்துள்ளது. இது ஏற்கனவே நலிவடைந்து வரும் BSNLன் சேவைகளை மேலும் முடமாக்கும் செயலாகும், எனவே நமது அகில இந்திய FORUM கொடுத்துள்ள ஆலோசனைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டு உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி BSNLல் பணி புரியும் அதிகாரிகள் முதல் அடிமட்ட ஊழியர் வரை அனைவரும் தொலை தொடர்பு அமைச்சருக்கு 10.08.2015 முதல் 22.08.2015 வரை அஞ்சல் அட்டை அனுப்புவது என்று ஏற்கனவே நமது அகில இந்திய FORUM முடிவெடுத்து உள்ளது.

**அந்த அஞ்சல் அட்டை இயக்கத்தின் துவக்க நாள் இன்று. நமது கிளை மற்றும் மாவட்ட சங்க நிர்வாகிகள் BSNLல் உள்ள அனைவரையும் அணுகி இந்த இயக்கத்தை வெற்றிகரமாக்கிட வேண்டும் என தோழமையுடன் கேட்டுக் கொள்கிறோம். இன்றே துவங்கி உடனடியாக ஓரிரண்டு தினங்களுக்குள் இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம். BSNLஐ பாதுகாக்க நடைபெறும் இந்த இயக்கத்தை முழு வெற்றி பெறச் செய்வோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநில செயலாளர்